Registered as a News Paper பக்கங்கள் 04 விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 சித்திரை 08 [21-04-93] புதன்கிழமை ஓசை 62

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு அதிகரித்த படி வழங்க பணிப்பு

புதிய சம்பள அதிகரிப்பின்படி பயிலுநர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கும், சாதாரண பயிலுநர் ஆசிரியர்களுக்கும் 01.01-93 இலும் 01-07-93 இலும் அதிகரித்த படியை வழங்குமாறு திறைசேரிச் செயலாளர் பிடி/355/86/20(கே) இலக்க 01 - 03 - 93 கடிதப்படி கல்வி உயர்கல்வி அமைச்சுக்கும், சகல மாகாண கோட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளார். இதன்படி 01-01-93 இல் ரூபா 300 உம் 01-07 93 இல் இருந்து ரூபா 200 ஆக மொத்தம் ரூபா 500 சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளது. 01-01-93 இற்கு முன்னர் ரூபா 1500 (4 ஆம் பக்கம் பார்க்க)

### சாவகச்சேரியில் பரபரப்பு

# பெண்கள், சிறுவர்கள் எலும்புக்கூடுகள்

# நவீன சந்தைப் பகுதியில் மீட்பு

## இந்திய இராணுவத்தின் கைவரிசை?

[சாவகச்சேரி]

சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதியில், குழியொன்றிலிருந்து ஆறு பேர்களுடைய சிதைவடைந்த எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டமை அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இச் சிதைவுகளில் மண்டை ஓடுகள், தாடை எலும்புகள் என்பனவற்றோடு சில உடுப்பு வகைகளும், தங்க நகைகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. ஆரம்ப பரிசோதனைகளில் இருந்து இச் சிதைவுகள் மூன்று இளம் பெண்களுடையதும், ஒரு சிறுமியினதும், இரு பாடசாலை சிறுவர்களினதும் என தெரிய வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன, மேலும் இச் சடலங்கள் இந்திய இராணுவம் இப்பகுதியில் இருந்த 1987, 1988 ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

நேற்றுக்காலை சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதிக்கு முன்பாக மின்கம்பத்திற்கென குழி ஒன்று வெட்டப்பட்டபோதே சிதைந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. நவீன சந்தையிலுள்ள ஆறுமுகம் குளிர்பான / கோப்பிக் கடையின் முன்பாகவுள்ள பாடசாலை மதிலுக்கு அண்மையாகக் குழிதோண்டியபோதே இவ்வெலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

முதலில் மின் கம்பக் குழி வெட்டப்பட்டவேளையில், சில எலும்புகள் காணப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி காவல்துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் துறையினர் முன்னிலையில் மேலும் அக்குழி வெட்டப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பல எலும்புகள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்டவற்றில் மூன்று மண்டையோடுகள் முழுமையாகவும், இரு மண்டையோடுகள் பாதியாகவும், ஒரு தாடை எலும்பும் காணப்பட்டன. அத்தோடு ஆறு பேருடைய உடுப்புகளும், இரண்டு சங்கிலிகள் (ஒன்று தாலியுடன்), இரண்டு மோதிரங்கள் என்பன ஒரு சரையாகவும் ஜிப்சி ஒரு சோடி. ஒரு தோடு என்பனவும் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருள்கள்

## இயக்கச்சியில் ராணுவம்மீது புலிகள் தாக்குதல்

### படை இழப்புகளுடன் பின்வாங்கியது

யாழ். போதனா வைத்தியசாலைக்கு

## யு. எஸ். எயிட் நிறுவனம் மருந்துப்பொருள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவ மனைக்கு ''யு. எஸ். எயிட்'' நிறுவனம் ஒரு தொகுதி மருந்துப் பொருள்களை அன்பளிப்புச் செய்துள்ளது.

சுமார் 21 கொள்கலன்களில் இறக்குமதி செய்யப்பட்ட இம் மருந்துப் பொருள்கள் கொழும்பில் உள்ள மருந்துக்களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக் கொள்கலன்களில் உள்ள மருந்துப் பொருள்களை பொறுப்பேற்றுக்கொள்வதற்காகயாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் நிர்வாக உத்தியோகத்தர் உட்பட மருத்துவ அதிகாரிகள் குழு ஒன்று நேற்று கொழும்பு நோக்கிப் புறப்பட்டுச்சென்றது. மேற்படி மருந்துப் பொருள்களின் தொகுதியில் முக்கியமான பல மருந்து வகைகள் அடங்கியிருப்பதாக கொழும்பு புறப்படுவதற்குச் சற்று முன்னர் எமது நிருபருடன் பேசிய இவ்வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (க)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா இம்மாதம் நேர்முக தேர்வு

தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கல்வித்துறையினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு 1993-1994 ஆம் கல்வி ஆண்டுகளுக்கான விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

அனுப்பாத ஆசிரியர்களும் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களும் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் அதிபர் யாழ். இந்து மகளிர் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும், மேற்படி விண்ணப்பிக்கும் பட்டதாரி பயிலுனர்களுக்கான

## வீரச்சாவு



கப்டன் காண்ஸ் (வாகீசன்)



2-ம் லெப், வீரையன்

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இயக்கச்சிப்பகுதியில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் காண்ஸ்/வாகீசன் (குலராஜலிங்கம் குலசேகரன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி), 2ஆம் லெப்டினன்ட் வீரையன் (கந்தசாமி விஜயதாஸ் - வத்தராயன் வடக்கு, தாளையடி) ஆகி

புச் செய்துள்ளது.

சுமார் 21 கொள்கலன்களில் இறக்குமதி செய்யப்பட்ட இம் மருந்துப் பொருள்கள் கொழும்பில் உள்ள மருந்துக்களஞ்சியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இக் கொள்கலன்களில் உள்ள மருந்துப் பொருள்களை பொறுப்பேற்றுக்கொள்வதற்காகயாழ்.

...டுசென்றது. மேற்படி மருந்துப் பொருள்களின் தொகுதியில் முக்கியமான பல மருந்து வகைகள் அடங்கியிருப்பதாக கொழும்பு புறப்படுவதற்குச் சற்று முன்னர் எமது நிருபருடன் பேசிய இவ்வைத்திய சாலைப் பணிப்பாளர் தெரிவித்தார். (க)

## பட்டப்பின் கல்வி டிப்ளோமா இம்மாதம் நேர்முக தேர்வு

தேசிய கல்வி நிறுவக ஆசிரியர் கல்வித்துறையினால் நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாடநெறிக்கு 1993-1994 ஆம் கல்வி ஆண்டுகளுக்கான விண்ணப்பதாரிகளை ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இந் நேர்முகப்பரீட்சைகள் 27 ஆம் திகதி யாழ். கோட்டம், மருதனார்மடக் கோட்டம், வேலணைக் கோட்டம் ஆகியவற்றிலும் 28 ஆம் திகதி வடமராட்சிக் கோட்டம், பண்டத்தரிப்புக் கோட்டம், சாவகச்சேரிக் கோட்டம் ஆகியவற்றிலும் நடைபெறவுள்ளன.

இதுவரையும் மேற்படி பயிற்சிக்கு விண்ணப்பங்களை அனுப்பாத ஆசிரியர்களும் பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களும் தங்கள் விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் அதிபர் யாழ். இந்து மகளிர் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும், மேற்படி விண்ணப்பிக்கும் பட்டதாரி பயிலுனர்களுக்கான நேர்முகத் தேர்வு 29 ஆம், 30 ஆம் திகதிகளில் நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இதற்கான மாதிரி விண்ணப்பப் படிவத்தினை யாழ். இந்து மகளிர் கல்லூரி அலுவலகத்தில் வேலை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் யாழ். கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## கல்விச் சேவை நியமனங்கள் இடைநிறுத்தப் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

கல்வித் துறையோடு சம்பந்தப்பட்ட சகல நியமனங்கள், இடமாற்றங்கள், சேவைநீடிப்பு ஆகியவற்றை மறு அறிவித்தல் வரை இடைநிறுத்துமாறு கல்விச்சேவைகள் சபை சகல மாகாணக் கல்வி அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளது.

ஏப்ரல் எட்டாம் திகதியில் இருந்து வழங்கப்பட்ட நியமனங்கள், சேவை நீடிப்பு, இடமாற்றங்களையும் இவ்வாறு இடைநிறுத்தச்செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மேலும் அறியவருகின்றது.

...சிறுவர்களினதும் என தெரிய வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன, மேலும் இச் சடலங்கள் இந்திய இராணுவம் இப்பகுதியில் இருந்த 1987, 1988 ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது,

நேற்றுக்காலை சாவகச்சேரி நவீன சந்தைப் பகுதிக்கு முன்பாக மின்கம்பத்திற்கென குழி ஒன்று வெட்டப்பட்டபோதே சிதைந்த எலும்புக்கூடுகள் கண்டுபிடிக்கப்பட்டன. நவீன சந்தையிலுள்ள ஆறுமுகம் குளிர்பான / கோப்பிக் கடையின் முன்பாகவுள்ள பாடசாலை மதிலுக்கு அண்மையாகக் குழிதோண்டியபோதே இவ்வெலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.

முதலில் மின் கம்பக் குழி வெட்டப்பட்டவேளையில், சில எலும்புகள் காணப்பட்டதைத் தொடர்ந்து சாவகச்சேரி காவல்துறைப் பணிமனையில் முறைப்பாடு செய்யப்பட்டது. இதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் துறையினர் முன்னிலையில் மேலும் அக்குழி வெட்டப்பட்டதைத் தொடர்ந்து மேலும் பல எலும்புகள் மீட்கப்பட்டன.

இவ்வாறு மீட்கப்பட்டவற்றில் மூன்று மண்டையோடுகள் முழுமையாகவும், இரு மண்டையோடுகள் பாதியாகவும், ஒரு தாடை எலும்பும் காணப்பட்டன. அத்தோடு ஆறு பேருடைய உடுப்புகளும், இரண்டு சங்கிலிகள் (ஒன்று தாலியுடன்), இரண்டு மோதிரங்கள் என்பன ஒரு சரையாகவும் ஜிப்சி ஒரு சோடி, ஒரு தோடு என்பனவும் மீட்கப்பட்டன.

மீட்கப்பட்ட பொருள்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆரம்பப் பரிசோதனைகளில்

[4 ஆம் பக்கம் பார்க்க]



2-ம் லெப், வீரையன

சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் நேற்று முன்தினம் இயக்கச்சிப்பகுதியில் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரச்சாவடைந்த கப்டன் காண்ஸ்/வாகீசன் (குலராஜலிங்கம் குலசேகரன் - மீசாலை தெற்கு, சாவகச்சேரி), 2ஆம் லெப்டினன்ட் வீரையன் (கந்தசாமி விஜயதாஸ் - வத்தராயன் வடக்கு, தாளையடி) ஆகியோருக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

# இயக்கச்சியில் ராணுவம்மீது புலிகள் தாக்குதல்

## படை இழப்புகளுடன் பின்வாங்கியது

[நமது நிருபர்]

இயக்கச்சிப் பகுதி காவலரணிலிருந்துதடைகளை அகற்றும் நோக்குடன் வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர் இதனால் இராணுவத்தினர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

நேற்றுக் காலை 6-20 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் அமைந்துள்ள பண்ணைக் காவலரணிலிருந்து தடைகளை அகற்றும் நோக்குடன் பத்து சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறினர். சுமார் 300 யார்தூரம் வந்த இராணுவத்தினர் மீதே விடுதலைப் புலிகள் இத் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதலின் போது காயமடைந்த இராணுவத்தினர் முகாமுக்குள் தப்பி ஓடிவிட்டனர். இத் தாக்குதலின்போது புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 17-ம் திகதி மதியம் 12 மணியளவில் இயக்கச்சிப் பகுதியில் உள்ள காவலரணில் வேலை செய்துகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்குடன் முகாமிலிருந்து 200 மீற்றர் தூரம் முன்னேறிவந்த இராணுவத்தினரை வழிமடக்கி விடுதலைப் புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். புலிகளின் தாக்குதலை அடுத்து 12-45 மணியளவில் இராணுவத்தினர் முகாமுக்குத் திரும்பிச் சென்றனர்.

## மீனவரின் படகுகள் கடற்படையால் உடைப்பு

குருநகரைச் சேர்ந்த மீனவர் ம. அலெக்சாண்டரின் சிறு மீன்பிடிவள்ளம் நேற்று முன்தினம் இரவு கல்முனைக் கடலில்வைத்து படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும், இவ் வள்ளத்தில் தொழில் செய்துகொண்டிருந்த மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்துள்ளார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் கல்முனைக் கரையினருகில் ஆனை விழுந்தான் என்ற இடத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சிறு கடற்படைப் படகில் வந்த கடற்படையினரையும், ஈ. பி. டி. பி. யினரையும் இம் மீனவர்கள் கண்டு ஓடமுயற்சித்தபோது இவர்களை நோக்கி நாம் தமிழர்கள்தான் ஓடாதீர்கள், நாம் சுடமாட்டோம் எனக்கூறி துரத்தி வந்து இம் மீனவர்களை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தார்கள் என குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர்.

தாம் பாய்ந்து நீந்திவந்த

[4 ஆம் பக்கம் பார்க்க]

"நகர" கப்பலில் வந்தோரை

## காங்கேசன் ஊடாக அனுப்ப அரச அதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

புதுவருடத்திற்காகக் கப்பல் மூலம் காங்கேசன்துறை ஊடாக குடாநாட்டுக்குவந்த அரச ஊழியர்களைத் திரும்பவும் காங்கேசன்துறையூடாக அனுப்புவதற்கு அரச அதிபர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது;

புதுவருடத்திற்காகக் காங்கேசன்துறையூடாகவந்த அரச ஊழியர்கள் திரும்பவும் காங்கேசன்துறை வழியாக செல்வதற்கு ஒழுங்குசெய்து தருமாறு அத்தியாவசியசேவைகள் நாயகத்தை யாழ். அரசாங்க அதிபர் கா. மாணிக்கவாசகர் கேட்டுக்கொண்டுள்ளதாக மேலதிக அரசாங்க அதிபரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (சி)

பல்கலைக் கழகத்திற்கான

# அனுமதியில் பாரபட்சம் வர்த்தக மாணவர் வழக்கு

(கொழும்பு)

1991ஏப்பிரலில்நடைபெற்ற க. பொ. த. (உயர்தரம்) விசேட பரீட்சையில் தோற்றிய வர்த்தகப்பிரிவு மாணவர்கள் தமது அடிப்படை உரிமைகளை மறுத்ததாகக் கூறி பல்கலைக் கழக மானியக் குழுவிற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். பல்கலைக் கழக அனுமதியில் பாரபட்சம் காட்டப்பட்டதாகக் கூறியே இவர்கள் வழக்குத் தாக்கல் செய்ய உள்ளனர்.

இது கடந்த மாதத்தில்உயர் நீதி மன்றம் பல்கலைக்கழக அனுமதியில் மானியக் குழு கடைப்பிடித்த அணுகுமுறைக்கு எதிராக தீர்ப்பு ஒன்றின் தொடர்ச்சியாக இருக்கும் என்று கருதப்படுகிறது.

பல்கலைக்கழக பொறியியல் பீட அனுமதிமுறையை மறுபரிசீலனை செய்யும்படி உயர்நீதி மன்றம் மானிய ஆணைக் குழுவைக் கேட்டிருந்தது தெரிந்ததே.

## 55 ஆயிரம் மாணவர்கள் பல்கலை. அனுமதிக்கு தகுதி

(கொழும்பு)

கடந்த ஆண்டு க.பொ த. உயர்தரப்பரீட்சைக்குதோற்றியோரில் 55136பேர் பல்கலைக் கழக அனுமதிக்கான அடிப்படைத் தகுதிகளைப்பெற்றுள்ளனர். இப்பரீட்சைக்கு கடந்த வருடம் 1 இலட்சத்து 58 ஆயிரம் மாணவர்கள் தோற்றியிருந்தனர்

இவர்களில் மருத்துவ விஞ்ஞானப் பிரிவில் சிங்களமொழியில் 7648 பேரும், தமிழ் மொழியில் 1246 பேரும், ஆங்கிலமொழியில் 16 பேரும் பல்கலைக்கழகப் பிரவேசத்துக்கான அடிப்படைத்தகுதிகளை பெற்றுள்ளனர்.

பொறியியல் பிரிவிற்காகச் சிங்களமொழியில்3000பேரும், தமிழ்மொழியில் 749 பேரும்,

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## 28ஆம் திகதி 2ஆம் தவணை ஆரம்பம்

[யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சகல பாடசாலைகளும் எதிர்வரும்28ஆம் திகதி புதன்கிழமை தமது இரண்டாம் தவணைக்காக திறக்கப்படவுள்ளன.

சகல பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் மற்றும் மாணவர்களும் இந்நாளில் சமுகமளித்து கற்கை நெறிகளை தொடங்குமாறு யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (பா)

# தமிழகக் கரை ஓரத்தில் பாதுகாப்பு தீவிரம்

## படகொன்று வந்ததாம்!

கோடியாக்கரை நோக்கி இலங்கையிலிருந்து படகொன்று வந்ததாகக் கருதப்படுவதைத் தொடர்ந்து நாகபட்டினம் முதல் வேதாரணியம் கடற்கரை நெடுகிலும் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஞாயிறு இரவு இலங்கைப் படகு என்று சந்தேகிக்கப்படும் ஒரு படகு கோடிக்கரை நோக்கி வந்ததாகவும் அதைத்தடுத்து நிறுத்த கடற்கரையோர காவல் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்த நேர்ந்ததாகவும் தெரியவருகிறது.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

# தமிழ்நாடு சட்டசபையில் எதிர்க்கட்சி உண்ணாவிரதம்

(சென்னை)

தமிழக சட்டப் பேரவையில் இந்திரா காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்று பிற்பகல் 2-30 மணி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்திவருகின்றனர்

சட்டப் பேரவையின் குளிர்சாதன வசதிகள் நிறுத்தப்பட்டதுடன் மின்விளக்குகளும் அணைக்கப்பட்டுவிட்டன. மாலை 6-30மணியளவில் மீண்டும் மின்விளக்குகள் ஏற்றப்பட்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்


### சங்கீதம் வினா-விடை

O/L பரீட்சைக்கும், வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சைகளுக்கும் பயன்படும் சங்கீத வினாவிடை விற்பனையாகிறது ஆக்கம்: "அநேகா" ஸ்ரீசுப்பிரமணியபுத்தகசாலை, யாழ்ப்பாணம். (4700)

### உங்களை அழைக்கின்றது

யோ. எகட்டனின் ஜெசித்தாரா உணவகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்ஒழுங்கை. மதியஉணவுப்பார்சல்கள் பகல் 11-30 மணி முதல் பெற்றுக் கொள்ளலாம். எங்களுக்குமுன் கூட்டியே அறிவித்தால் நேரடியாக அனுப்பி வைக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு: முகாமையாளர் ஜெசித்தாரா சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. (சி-6357)

### ஜெசித்தாரா உணவகம்

நீங்கள் சுவையான உணவை எங்கும் உண்ணலாம். நாங்கள் உங்கள் உணவு வகைகளுக்கு மேலும் சுவையூட்டுகின்றோம். வந்து பரீட்சித்துப் பாருங்கள். ஜெசித்தாரா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி. (சி/ 6358)


### இலவச பால்மா விநியோகம்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினர் குரும்பசிட்டி மற்றும் குரும்பசிட்டி கிழக்கு கிராமசேவையாளர் பிரிவுகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் மூன்று வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு இலவசமாக பால்மா வழங்க முன் வந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தில் பயன் பெறத் தகுதியுடையவர்கள் எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் பிற்பகல் 2 முதல் 5 மணிவரை மயிலணி ஒழுங்கை சுன்னாகம் முகவரியில் இயங்கும் சபையின் தற்காலிக அலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.


## சேவை

சகலவிதமான உணவு வகைகளுக்கும் ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும். வெளிநாட்டில் பயிற்சி பெற்ற உணவு வல்லுநர்களின் ஆலோசனைக் கேற்ப உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள். உண்மை புலப்படும்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.

(சி-6439)


## அறிவித்தல்

### கோப்பாய் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவில் இடைக்கால நிர்வாக சபை

மேற்படி கோவிலை நிர்வகிப்பதற்கு யாழ். அரச அதிபரால் இலக்கம் ஏஈ/ரி/277 திகதி 26-03 1993 தேதிய கடித மூலம் கீழ்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

16-04-1993 வெள்ளிக்கிழமை தொடக்கம் இக் கோவில் குறிப்பிட்ட நிர்வாகத்தின் மேற்பார்வையில் இயங்கும் என்பதை அறியத்தந்து சகலரும் நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன்.

1) திரு. ஏ. வி. மயில்வாகனம் கோப்பாய் தெற்கு — தலைவர்
2) திரு. க. ச. முத்துவேல் கோப்பாய் வடக்கு — உப-தலைவர்
3) திரு. இ. இராசரத்தினம் கோப்பாய் வடக்கு — செயலாளர்
4) திரு. வே பே. செல்லையா இருபாலை — உப-செயலாளர்
5) திரு. வே. சின்னத்தம்பி நீர்வேலி — உறுப்பினர்
6) திரு த. இராசரத்தினம் இருபாலை — உறுப்பினர்
7) திரு செ. ஐயாத்துரை உரும்பராய் — உறுப்பினர்

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.
16-04-1993
(4717)

இ. இராசரத்தினம்
கௌரவ செயலாளர்
இடைக்கால் நிர்வாகசபை

## போதைப் பொருளுடன் இருவர் கைது

[கொழும்பு]

இலங்கைப் பிரஜை ஒருவரும் பாகிஸ்தானிய பிரஜை ஒருவரும் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் போதைப் பொருளுடன்நேற்றுமுன் தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்துகைப்பற்றப் பட்ட ஹெரோயின் போதைப் பொருளின் பெறுமதி பதினேழு இலட்சம் ரூபாவுக்கும் அதிகமானதாகும் என்றும் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

யாழ் மாவட்ட
தச்சுத் தொழிலாளர் சங்கத்தின்

## முக்கிய அறிவித்தல்

09-05-93 இல் விசேட பொதுக் கூட்டம் நடைபெறவிருப்பதால், இதுவரையில் அங்கத்துவம் பெறாமல் இருக்கும் சகல தச்சுத் தொழிலாளர்களும் எதிர்வரும் 31-04-93 க்கு முன்பாக அங்கத்தவராக இணைந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். இதன் பின்பு இணைந்து கொள்ளும் அங்கத்தவர்கள் பொதுக் கூட்டத்தில், வாக்களிக்கும் உரிமையை இழந்தவராக கருதப்படுவர்.

குறிப்பு: காலை 9 00 மணி தொடக்கம் பிற்பகல் 1.00 மணி வரையில் காரியாலயம் திறக்கப் படும்.

- நிர்வாகம்

யாழ். மாவட்ட தச்சுத் தொழிலாளர் சங்கம்,
16, பசார் லேன் (செம்மா தெரு),
யாழ்ப்பாணம். (4731)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## மகாபொல கொடுப்பனவு 4ஆம் தவணைப் பணம்

பல்கலைக்கழக 2ஆம், 3ஆம், 4ஆம் வருட மருத்துவ, கலை, விஞ்ஞான பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான 4ஆம தவணைப்பண மகாபொல கொடுப்பனவுகளை 20. 04. 93 முதல் வழங்க நிதிக்கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவு பற்றிய முழுவிபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.

(சி-6468)

## கடத்தப்பட்ட வேட்பாளர் பிணையில் விடுவிப்பு

(கொழும்பு)

ஆயுதக் குழுவினால் கடத்தப்பட்ட ஜனநாயக ஐக்கிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வாழைத் தோட்ட பிரதிநிதி சிசில் குலசிங்க ஒரு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீது விசாரணை எதுவும் இன்றி குற்றப்பத்திரிகை மூன்றில் கையெழுத்து வைக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டதாகவும் தன்னை நீர்கொழும்பு பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

தனக்கும் தன் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் தன்னை ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இருந்து விலகியதாக தெரிவிக்கும் ஒரு கடிதத்தில் கையொப்பம் இடுமாறு வற்புறுத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் வாழைத் தோட்டப் பகுதியில் தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளபோது தனக்குப் பின்னால் வந்த சிவில் உடையணிந்த ஆயுதக் குழுவினர் பலாத்காரமாக பஜெரோவில் ஏற்றியதாகவும், தான் ஜனாதிபதியின் வீட்டுக்கு முன்பகுதியில் வைத்தே ஏற்றப்பட்டதாகவும் அப்போது அங்கு இருந்த பொலிசார் எதுவும் செய்யாமல் சும்மா இருந்ததாகவும் மேலும் அவர் தெரிவித்தார்

## வன்முறை மூலம் தேர்தலில் வெற்றி பெற முயற்சி

### ஐ.தே.க குறித்து லக்திவ ஆசிரியர்

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தோல்வியை ஏற்படுத்துவது ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியே. எனவே தான் வன்முறைகளை அக் கட்சியின் மீது ஐ. தே. க. ஏவி விட்டுள்ளது என லக்திவ ஆசிரியர் விறி எக்கிகொட தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான வாக்குகள் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு கிடைக்கவிருப்பதால் தம்மைத் தோல்வியில் இருந்து காப்பாற்றும் முன்னேற்பாடாகவே ஐக்கிய தேசியக் கட்சி இக்கட்சி மீது வன்முறைகளை ஏவி வன்முறை மூலம் மீண்டும் இத்தேர்தலில் வெற்றியை நாடி நிற்கின்றது என்றும் அவர் கூறினார்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

## யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

எமது கிளையின் உப தலைவர் அமரர் திரு. க. புவனேந்திரன் அவர்கள் உயிர்காப்புச் சேவையிலீடுபட்டிருந்த நேரம் இலங்கை இராணுவத்தினால் காயம் ஏற்பட்டபோது அவரை உடனடியாகப் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற தொண்டர்கள் அனைவருக்கும், அவருடைய புகழுடல் கிளைத் தலைமையகத்திலிருந்து அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது வருகை தந்த அனைவருக்கும், மலர்வளையங்கள், பூமாலைகள், அனுதாபங்கள், அஞ்சலிகள் அளித்த அனைவருக்கும், அவரது இறுதிக் கிரியை ஊர்வலத்தில் பங்குபற்றிய யாவருக்கும், அவர் மரணிக்க நேர்ந்த சூழலைக் கண்டித்து நடைபெற்ற பேரணியில் பங்குபற்றிய அனைத்துத் தொண்டு நிறுவன ஊழியர்கள், உறுப்பினர்கள், அனுதாபிகள் ஆகியோருக்கும் மேலும் பலவாறான உதவிகள் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
20-04-1993.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க,
யாழ். கிளை.
(சி/6471)


கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

## மாபெரும் கலைவிழா

காலம்: 21. 04. 93 இன்று மாலை 7. 00 மணி
இடம்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
நிகழ்ச்சிகள்: ★ "நகைச்சுவை கதம்பம்"


## பிறந்த நாள் நினைவலைகள்



வந்துள்ளனர்.

இந்தத் திட்டத்தில் பயன் பெறத் தகுதியுடையவர்கள் எதிர்வரும் ஞாயிறு மற்றும் திங்கட்கிழமைகளில் பிற்பகல் 2 முதல் 5 மணிவரை மயிலணி ஒழுங்கை சுன்னாகம் முகவரியில் இயங்கும் சபையின் தற்காலிகஅலுவலகத்தில் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப் பட்டுள்ளனர்.

6) திரு த. இராசரத்தினம் இருபாலை — உறுப்பினர்
7) திரு செ. ஐயாத்துரை உரும்பராய் — உறுப்பினர்

கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
16-04-1993

இ. இராசரத்தினம்
கௌரவ செயலாளர்
இடைக்கால நிர்வாகசபை

(4717)

களுக்கான 4ஆம் தவணைப்பண மகாபொல கொடுப்பனவுகளை 20.04.93 முதல் வழங்க நிதிக்கிளையில் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இக்கொடுப்பனவு பற்றிய முழுவிபரங்களும், அறிவுறுத்தல்களும் பல்கலைக்கழக விளம்பரப் பலகைகளில் இடப்பட்டுள்ளன. இதற்கமைவாகக் கொடுப்பனவை உரித்துடைய மாணவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

பதிவாளர்.

(சி-6468)

பட்டபோது அவரை உடனடியாகப் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற தொண்டர்கள் அனைவருக்கும், அவருடைய புகழுடல் கிளைத் தலைமையகத்திலிருந்து அவரது இல்லத்திற்கு ஊர்வலமாக எடுத்துச் சென்றபோது வருகை தந்த அனைவருக்கும், மலர்வளையங்கள், பூமாலைகள், அனுதாபங்கள், அஞ்சலிகள் அளித்த அனைவருக்கும், அவரது இறுதிக் கிரியை ஊர்வலத்தில் பங்குபற்றிய யாவருக்கும், அவர் மரணிக்க நேர்ந்த சூழலைக் கண்டித்து நடைபெற்ற பேரணியில் பங்குபற்றிய அனைத்துத் தொண்டு நிறுவன ஊழியர்கள், உறுப்பினர்கள், அனுதாபிகள் ஆகியோருக்கும் மேலும் பலவாறான உதவிகள் அளித்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
20-04-1993.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க,
யாழ். கிளை.

(சி/6471)

கோப்பாய் நாவலடி சனசமூக நிலைய வளர்ச்சிக்காக

# மாபெரும் கலைவிழா

காலம்: 21. 04. 93 இன்று மாலை 7. 00 மணி
இடம்: கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
நிகழ்ச்சிகள்: ★ "நகைச்சுவை கதம்பம்"
★ "களத்தில்காத்தான்" (சிந்துநடைக்கூத்து)

KOPAY NAVALADY




COMMUNITY CENTRE

★★ கராத்தே கண்காட்சி ★★

ராஜன்ஸ் இசைக்குழு வழங்கும் தேனிசை வார்ப்புகள்

பிரவேசம் ரூ. 15/-

நிலைய நிர்வாகிகள்

விளம்பர அன்பளிப்பு: MEDI-AIDS PHARMACY
644. POINT PEDRO ROAD, NALLUR

(4721)

## பிறந்த நாள் நினைவலைகள்



| வீர ஜனனம் | வீர சொர்க்கம் |
|---|---|
| 21 | 16 |
| 04 | 09 |
| 72 | 91 |

## லெப். டொமினிக் மாஸ்ரர்

வீட்டை விடுத்து ஏட்டைத் துறந்து - தாய்
நாட்டைக் காக்க - மணலாற்றுக்
காட்டை அடைந்து - எதிரி
கோட்டை விடும்படி செய்தவன்
ஆனையிறவில் அடைகாத்துக் கிடக்கும்
இராணுவமே - ஒரு முடிவு காணுவமே வா என்று
சமருக்கழைத்தவன் - அங்கு செய்த போரில்
பெய்த குண்டு மாரியில் சளைக்காமல் போரிட்டவன்
பிந்திய மணலாற்றுப் போரில் முந்திய வீரன்
சிந்திய குருதியால் ஈழமே சிவந்தது
ஆம்! இதுதான் இவனது இறுதிக்களம்
எதிரியின் தளம் அங்கே சிதைந்தது
இவனது உடல் இங்கே புதைந்தது
ஓ! மாவீரனே நீ இறக்கவில்லை - உன்னை
நாம் மறக்கவில்லை தமிழ் அன்னை உன்னை
அணைத்துக் கொண்டாலும் - எம் நெஞ்சங்களில்
பிணைத்துக் கொண்டோம் நின் நினைவுகளை
நீ புதை குழியில் இனிதே தூங்கு!
உனது ஆயுதத்தை நாங்கள் தாங்குகிறோம்.
சாதனை வென்று
சாதனை படைத்தவனே
உனது இலட்சியம்
அதை அலட்சியம் செய்யாமல்
நிறை வேற்றப் போராடுவோம்.

நன்றி: சி. தயாபரன்

மகனே! இன்று உனது இருபத்தோராவது பிறந்தநாள். இதயமுருகி உன்னை அஞ்சலிக்கின்றோம்.

டொமினிக் வீதி,
நீர்வேலி.

- குடும்பத்தினர்

(4706)

அருணோதயா ச. ச. நிலைய

## சுற்றுப் போட்டிகள்

அரியாலை அருணோதயா சனசமூக நிலையம் 33-ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு செற்அப் முறையிலான கரபந்தாட்டம், வலைபந்தாட்டம், தாச்சி ஆகிய சுற்றுப் போட்டிகள் வருகிற மாதம் நடாத்தப்பட இருக்கின்றன இப்போட்டிகள் யாவும் வடமாகாண ரீதியில் நடாத்தப்படும். கரபந்தாட்டம் விசேடமாக அகில இலங்கை கரப்பந்தாட்ட வீரன் அமரர் மு. சீவரெத்தினம் அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்ப இறுதித் திகதி 30-04-1993 ஆகும். விண்ணப்பங்களை முடிவுத் திகதிக்கு முன் எஸ். கே இராசரெத்தினம், இல. 84/1, சந்தோசம் வீதி, அரியாலை என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகம்,
அருணோதயா சனசமூக நிலையம்.

(4730)

## நினைவு கூருகின்றோம்...
## 1993-04-21

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - குடும்பிமலை பள்ளத்துச்சேனைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

நிர்மலன் (குணரட்ணம் தனபாலசிங்கம் - ரீசி குவாட்டஸ், ஏறாவூர் - 04 - மட்டு.)

1988 ஆம் ஆண்டு யாழ். தொண்டமானாறு, மயிலியதனைப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய .

2-ம் லெப். தம்புக்கிளி (மாணிக்கம் பாலச்சந்திரன் - மயிலியதனை, தொண்டமானாறு - வல்வெட்டித்துறை)

1989 ஆம் ஆண்டு சுழிபுரம் - பண்ணாகம் பகுதியில் வீட்டுக்குள் புகுந்த இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப்பெண்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி/6467]

## சிந்தனைக்கு

அற்புதங்கள் ஒருபோதும் நிகழ்வதில்லை. விசுவாசிகளின் கற்பனையைத் தவிர.

- ஜவஹர்லால்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 21-04-1993

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023

த. பெ. எண்-05


## போரும் அபிவிருத்தியும் அரசின் புதிய கண்டுபிடிப்பு

போரும் - அபிவிருத்தியும் ஒன்றிற்கொன்று முரணானவை. யுத்தம் நடக்கும் பூமியில் அபிவிருத்தி என்பது சாத்தியமானதல்ல. அபிவிருத்தி சாத்தியமாக வேண்டுமானால், போர் நிறுத்தப்பட வேண்டும். ஆனால், சிறிலங்கா அரசாங்கம் போரைப் பற்றியும் அபிவிருத்தியைப் பற்றியும் ஒரே நேரத்தில் பேசுகின்றது. போர் ஒருபுறம் அபிவிருத்தி ஒருபுறம் நடைபெறுவதாக உலகை நம்ப வைக்கப்பார்க்கின்றது.

தனது பேச்சிற்கு ஆதாரம் சேர்ப்பது போல், வடக்கு - கிழக்கு 'மாகாணங்களில் 2100 அபிவிருத்தித் திட்டங்களுக்கு 10 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக பிரேமதாசா அரசாங்கம் அறிவித்துள்ளது. இவ் ஒதுக்கீடும், ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்பின் பேரில் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அதாவது, ஆயிரக்கணக்கான திட்டங்களுக்கு பத்துக் கோடி ரூபா ஒதுக்கீடு என்பது வெறும் ஏமாற்று வித்தையாகும். பிரேமதாசாவின் இவ் ஒதுக்கீடு ஒரு திட்டத்திற்கு சுமார் 50,000 ரூபாவிற்கும் குறைவானது என்பதில் இருந்தே அபிவிருத்தித் திட்டத்தின் 'விஸ்தீரணம்' தெரியவரும்.

இந்நிலையில், ஒருமுகப்படுத்தப்பட்ட கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள பல மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கென திட்ட அமுலாக்கல் அமைச்சு திட்டம்தயாரித்துள்ளதாகவும், இத்திட்டங்களைச் செயற்படுத்த ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், மற்றும் உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் என்பனவற்றிடம் உதவிபெற மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அரச தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் இப்பேச்சானது உலகத்தை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகும்.

இதற்குப் புதிதாக உதாரணங்களோ அன்றி விளக்கங்களோ தேட வேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென வாங்கிய நிதியின் ஒரு பகுதியை ஏதோ ஒரு வழியில், யுத்தத்திற்குத் திசை திருப்பிவிட்டது. அத்தோடு, ஒரு பகுதியைக் கொண்டு தமிழர் தாயகப் பகுதியை அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமித்தது. இந்தவரிசையில் ஐம்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட

# அமைச்சர் சந்திப்புக்கு 15 லட்சம்; தொழில் தொடங்க தனி மாமூல்

### அ. தி. மு. க. ஆட்சி பற்றி கருணாநிதி

(காஞ்சிபுரம்)

அ. தி மு. க. மந்திரிகளைச் சந்திப்பதற்கு 15 லட்சம் ரூபா லஞ்சம் கொடுக்க வேண்டியிருக்கிறது. புதிய தொழில் தொடங்க அனுமதி பெற தனியாக மாமூல் கொடுக்கவேண்டியுள்ளது.

இவ்வாறு திருமண விழா ஒன்றில் கலந்து கொண்டு பேசிய தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

இந்த திருமண விழாவுக்கு காஞ்சிபுரத்துக்கு வரும் வழியில் வரமுடியாமல் சென்னையில் இருந்து எவ்வளவோ தூரம் சுற்றிக்கொண்டு வந்துள்ளோம். இன்று ராணிப்பேட்டைக்கு ஒரு ராணி அம்மா செல்வதால் யாரும் அந்தப் பாதையால் செல்லாது தடை உத்தரவு விதித்துள்ளார்கள். பாடசாலைகள், தொழிற்சாலைகள் அடைக்கப்பட்டுள்ளன. ஆனால் எத்தனை வழிகளை அடைத்தாலும், தடுத்தாலும் நாங்கள் காஞ்சிபுரத்துக்கு வந்து சேர்வோம்.

தமிழ்நாட்டில் இன்று அரச அதிகாரிகள் அடிமைகளாக மாறிவிட்டார்கள். காமராஜர் ராஜாஜி. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், பக்தவச்சலம், அண்ணா ஆகியோர் முதல்வராக இந்த வழியால் வந்துள்ளார்கள். ஆனால் இன்றைய தினம் பாதுகாப்பு என்ற பேரில் பந்தா படாடோபம் நடாத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டுக்கே சாபக்கேடு என்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது.

தமிழ்நாட்டு வாக்காளப் பெருமக்கள் செய்து விட்ட தவறால் எவ்வளவு வேதனை அடைந்துள்ளார்கள் என்பதை இப்போது உணர்கிறார்கள்.

### தமிழக சபாநாயகரை

# பதவி நீக்கும் கோரிக்கை கைவிட்டதாக அறிவிப்பு

(சென்னை)

தமிழக சட்டப் பேரவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையாவை பதவிநீக்கக் கோரி காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் முப்பத்தாறு பேர் கொண்டுவந்த பிரேரணை கைவிடப்பட்டுவிட்டதாக பேரவை துணைத்தலைவர் பொன்னுசாமி நேற்று அறிவித்தார்.

துணைத்தலைவர் இந்த அறிவிப்பை வெளியிட்டதைத் தொடர்ந்து சபையில் பெரும் அமளி ஏற்பட்டது. இறுதியில் காங்கிரஸ் கட்சியினரும், திருநாவுக்கரசுவும் சபையின் நடவடிக்கையை புறக்கணித்து வெளியேறினர்.

இந்தப் பிரேரணையை பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் முன்மொழிந்த போதும், வழிமொழிவதற்கு இடமளிக்காமலேயே கைவிடப்பட்டதாக துணைத்தலைவர் அறிவித்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய முதல்வர் ஜெயலலிதா காங்கிரஸ் கட்சியினர் தேர்தலுக்கு முன்பாகவே ஆட்சியைக் கைப்பற்ற அவசரப்படுவதாக தெரிவித்தார்.

## தமிழகத்தில் தற்போது சூட்கேஸ் அரசியல்கலாசாரம்

### காங்கிரஸ் கட்சி விமர்சனம்

தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க.ஆட்சிக்கு வந்த பின்னர் 'சூட்கேஸ்' அரசியல் கலாசாரம் ஒன்று ஆரம்பித்திருப்பதாக காங்கிரஸ் கட்சியினர் சுட்டிக்காட்டி வருகின்றனர். அதாவது ஊழல் மலிந்துவிட்டது என்பதையும், பணப் பரிமாற்றம் சூட்கேஸ் பெட்டிகளால் இடம் பெற்று வருகின்றது என்பதையும் வெளிப்படுத்தவே சூட்கேஸ் அரசியல்கலாசாரம்என்றவார்த்தை தற்போது தமிழக அரசியல் அரங்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## சென்னை நகருக்கு ரயில்கள் மூலம் குடிநீர்

சென்னை நகருக்கு ரயில்கள் மூலம் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக சேலத்திலிருந்து மூன்று லட்சம் கலன் குடி தண்ணீர் ரயில் மூலம் கொண்டு வரப்பட்டு வில்லிவாக்கம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து குழாய்கள் மூலம் கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. தினமும் நெய்வேலி, ஈரோடு ரயில் நிலையங்களிலிருந்து தலா ஒவ்வொரு ரயில் வீதம் குடிநீர் சென்னைக்கு எடுத்து வர

## பி. ஜே. பி அறிக்கை

(டில்லி)

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு மத்திய அரசின் ஆத்திரமூட்டும் செயல்களும் சட்டமுறை தாமதமும்தான் காரணம் என பாரதீய ஜனதா டில்லியில் வெளியிட்ட அயோத்தி குறித்த தனது 175 பக்க விபர அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.

## அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி முறையின் எதிர் காலம் குறித்து அமெரிக்கா பெரும் கவலை தெரிவித்துள்ளது.

## திராவிடக் கலையுடன்கூடிய விக்கிரகம் மீட்பு

அண்மைக்காலமாக சாவகச்சேரிப் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் மேலாய்வின் போது பல புராதன வரலாற்றுச் சின்னங்கள் வெளிக்கொணரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேபோன்று கடந்த வாரம் தற்போதயவாரிவானேஸ்வரர் ஆலயத்திற்கு கிழக்கேயுள்ள கடற்பிராந்தியத்தை அண்டிய மணல் பகுதியில் யாழ். பல்கலைக்கழக வரலாற்று துறையினர்ஆய்வினை மேற்கொண்ட போது திரு. சொக்கலிங்கம் என்பவர் மணலில் புதையுண்டிருந்த விநாயகர் சிலையொன்றை மீட்டெடுத்துள்ளார்.

செம்பினால் வார்க்கப்பட்ட இச்சிலையானது இரட்டையடுக்குத் தாமரை ஆசனத்தில் இருக்கும்நிலையில்அமைந்துள்ளது. இதன் தலையலங்காரமும், ஆடை ஆபரண அமைப்புகளும் 15 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட திராவிடக் கலைமரபை வெளிப்படுத்தி நிற்கின்றன. தற்போது அவ்விக்கிரகம் யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறையில் வைக்கப்பட்டுள்ளது இச்செப்பு விக்கிரகம் கண்டெடுக்கப்பட்ட இடத்தில் பொதுமக்களால் மணல்அகழ்ந்தெடுக்கப்பட்ட போது வேறும் சில இந்து விக்கிரகங்கள் சில வாரங்களுக்கு முன்னர் கண்டெடுக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

## கந்தரோடையிலிருந்து எலும்பினாலான கருவி மீட்பு

தமிழர் பண்பாட்டு, வரலாற்று மூலாதாரங்களைத் தேடும் பணியொன்றின் தொடர்ச்சியின் போது கந்தரோடையிலிருந்து வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்குரியது எனக் கருதத்தக்க எலும்பினாலான ஒரு சிறிய கருவி மீட்கப்பட்டுள்ளது. இக்கருவியின் ஒரு பக்க விளிம்பு சீவிக் கூர்மையாக்கப்பட்டுள்ளது. அதன் இருபக்கங்களில் ஒருபுறம் அழுத்தமாகச் சமப்படுத்தப்பட்டு, கோட்டு வரைபு முறையில் ஒரு விலங்கின் உருவம் பதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றுத் துறையைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் செ. கிருஷ்ணராசா அவர்களே இந்த வரலாற்று மூலத்தினை இனங்கண்டு வெளிப்படுத்தியவராவார். சில வாரங்கட்கு முன்னர் கந்தரோடையிலிருந்து தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனமொன்று மீட்கப்பட்ட அதே மையத்திலேயே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எலும்பினாலான கருவி அகழ்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திரு. கிருஷ்ணராசா மேலும் இந்த வரலாற்று மூலத்தினைப் பற்றித் தகவல் தருகையில்; எலும்பினாலான கத்தி போன்ற இக்கருவியில் வரையப்பட்டுள்ள வடிவமானது தலையில் இரண்டு கொம்புகள், கழுத்தின் கீழ்த்தாடை (சுருக்கங்களுடன்) ஆகியவற்றினையுடைய நீட்டுப்போக்கான எருது ஆக அமையலாம் எனக் குறிப்பிடுகின்றார். இவ்வகையான உருவம் பொறிக்கப்பட்ட எலும்பினாலான கருவியானது வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துடன் தொடர்புபடுத்தக் கூடிய வகையில் வட இலங்கையில் கிடைத்திருப்பது இதுவே முதல்தடவை எனவும் அவர் கருதுகின்றார்.

மேலும் இவ்வெலும்புக் கருவி காணப்பட்ட நிலை பற்றிக் குறிப்பிடுகையில் தமிழ் வரி வடிவில் உள்ள சிறப்பெழுத்தான 'ழ' உட்பட தமிழ்ப் பிராமி வரி வடிவங்கள், குறியீடுகள் ஆகியன பொறிக்கப்பட்ட கறுப்பு - சிவப்பு மட்பாண்டங்களும், ரோமன் 'ரௌலெட்டட்' வகையைச் சேர்ந்த மட்பாண்டங்களும், ஈமச்சாம் பால்களும் நிறைந்திருந்த தடித்த மண்படையடுக்கின் கீழ்ப்புறமாக; வண்டல் மண்படையடுக்கொன்றினால் வேறுபடுத்தப்பட்ட மண்படையடுக்கினூடே முழுமையான பெரிய சிப்பிகளும், பளிங்குருத் தன்மை கொண்ட (குவாட்ஸ்) கற்களும் நிறைந்துள்ள மையமொன்றிலிருந்தே இக்கருவி பெற்றுக் கொள்ளப்பட்டது என்றார். இத்தகைய நிலையானது பெருங்கற்காலப் பகுதிக்கு முதல் உள்ள ஒரு காலப் பிரிவுக்குரியதாக இந்த முக்கியத்துவம் வாய்ந்த எலும்புக் கருவியினைக் கொள்வதற்கு எம்மை தூண்டுகின்றது எனவும் சூசகமாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் ஆராய்ந்து வருகின்றார்.

## கல்விக்கழக ஆசிரியர்க்கு

மாகாணங்களிலுள்ள பல மாவட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கென திட்ட அமுலாக்கல் அமைச்சு திட்டம் தயாரித்துள்ளதாகவும், இத்திட்டங்களைச் செயற்படுத்த ஐரோப்பிய பொருளாதாரச் சமூகம், மற்றும் உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் என்பனவற்றிடம் உதவிபெற மேலும் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் அரச தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகின்றது. சிறிலங்கா அரசாங்கத்தின் இப்பேச்சானது உலகத்தை ஏமாற்றும் ஒரு நடவடிக்கையாகும்.

இதற்குப் புதிதாக உதாரணங்களோ அன்றி விளக்கங்களோ தேட வேண்டிய அவசியமில்லை. கடந்த காலத்திலும் சிறிலங்கா அரசாங்கம் வடக்கு - கிழக்கு அபிவிருத்திக்கென வாங்கிய நிதியின் ஒரு பகுதியை ஏதோ ஒரு வழியில், யுத்தத்திற்குத் திசை திருப்பிவிட்டது. அத்தோடு, ஒரு பகுதியைக் கொண்டு தமிழர் தாயகப் பகுதியை அபிவிருத்தி என்ற போர்வையில் ஆக்கிரமித்தது. இந்தவரிசையில் ஐம்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட கல்லோயத்திட்டத்திலிருந்து எண்பதுகளில் நடைமுறைக்குவந்தமகாவலித்திட்டம்வரை உருவாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தித்திட்டங்களும், அதன் தொடராக வந்த குடியேற்றத் திட்டங்களும் ஆக்கிரமிப்புத்திட்டங்களே ஆகும்.

இதே போன்றே வடக்கு - கிழக்கு மக்களின் பெயரால் பெறப்பட்ட நிதியும் முழுமையாகக் குடியேற்றப்பட்ட சிங்களவருக்கும் இம்மாகாணங்களின் எல்லைகளில் இருந்த சிங்களவருக்குமே வழங்கப்பட்டன. வடக்கு - கிழக்குமாகாணங்களின் பெயரில் பெறப்பட்ட நிதிகள் திருமலை, அம்பாறை, வவுனியா மாவட்டங்களில் உள்ள சிங்களவருக்கே வழங்கப்பட்டன. அதாவது, சிங்களவர்களே இம்மாவட்டங்களின் மக்களாகக் கணிக்கப்பட்டனர்.

இதேவேளை வடக்கு -கிழக்கு மாகாணங்களில் சகலரையும் சென்றடையக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள் எதற்கும் நிதி ஒதுக்கப்படவில்லை. 'விடுவிக்கப்படாத பிரதேசங்கள்' என்ற ரீதியில், இம்மாகாணங்களின் பெரும் பகுதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்ய முடியாது என அரசாங்கம் தெரிவித்தது, ஆனால், வடக்கு - கிழக்கு மாகாணங்களின் பெயரில் பெருமளவு நிதியை அந்நிய நாடுகளிடம் இருந்து பெற்றுக் கொள்வதில் அன்று தொட்டு இன்று வரை தீவிர கவனம் செலுத்தி வருகின்றது.

பேரினவாத சிந்தனையுடைய அரசாங்கத்திடம் இருந்து நீதி கிடைக்கும் என்பது எதிர்பார்க்க முடியாததுதான். தமிழருக்கு இது நன்கு தெரிந்ததும்தான். ஆனால், வடக்கு - கிழக்கின் பெயரால் நடைபெறும் மோசடியைச் சுட்டிக்காட்டும் உரிமை தமிழர்களுக்கு உண்டு. ஆகையினால், நிதிஉதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் என்பன இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களின் பெயரில் சிங்கள அரசு புரியும் மோசடியைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சிக்க வேண்டும். இதற்கு வடக்கு - கிழக்கு அபிவிருத்தி என்பது உண்மையிலேயே அப்பகுதி மக்களிடையே இடம்பெறுகின்றதா என்பதை இந் நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும். அதன் பின்னர் இவ்உதவிகளை வழங்குவது குறித்து, உதவி வழங்குவோர் முடிவு செய்ய வேண்டும். இல்லையேல் இலங்கையில் இனப்பிரச்சினை நீடிப்பதற்கும், சிங்கள பேரினவாதம் புரியும் படுகொலைகள், ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு இவ் உதவி வழங்கும் நாடுகளும், நிறுவனங்களும் உதவி வழங்குவதாகவே பொருள்படும்.

## சூட்கேஸ் அரசியல்கலாசாரம்

### காங்கிரஸ் கட்சி விமர்சனம்

தமிழகத்தில் அ.இ.அ.தி.மு.க.ஆட்சிக்கு வந்த பின்னர் 'சூட்கேஸ்' அரசியல் கலாசாரம் ஒன்று ஆரம்பித்திருப்பதாக காங்கிரஸ் கட்சியினர் சுட்டிக்காட்டி வருகின்றனர். அதாவது ஊழல் மலிந்து விட்டது என்பதையும், பணப் பரிமாற்றம் சூட்கேஸ் பெட்டிகளால் இடம் பெற்று வருகின்றது என்பதையும் வெளிப்படுத்தவே சூட்கேஸ் அரசியல்கலாசாரம்என்றவார்த்தை தற்போது தமிழக அரசியல் அரங்கில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## சென்னை நகருக்கு ரயில்கள் மூலம் குடிநீர்

சென்னை நகருக்கு ரயில்கள் மூலம் குடிநீர் கொண்டு வரும் திட்டம் ஒன்று அமுல் படுத்தப்பட்டு வருகின்றது. இதன் முதற்கட்டமாக சேலத்திலிருந்து மூன்று லட்சம் கலன் குடி தண்ணீர் ரயில் மூலம் கொண்டு வரப்பட்டு வில்லிவாக்கம் ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டு அங்கிருந்து குழாய்கள் மூலம் கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பப்பட்டது. தினமும் நெய்வேலி, ஈரோடு ரயில் நிலையங்களிலிருந்து தலா ஒவ்வொரு ரயில் வீதம் குடிநீர் சென்னைக்கு எடுத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## விமானங்களை மீளப்பெற ஈராக் கோரிக்கை

வெளிநாடுகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தனது முப்பத்தேழு பயணிகள் விமானங்களையும் மீளத் தரவேண்டும் என்று ஈராக் அரசு ஐக்கிய நாடுகள் சபையிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஈராக்கிய தேசிய விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்குச் சொந்தமான இந்த விமானங்கள் 1991 ஆம் ஆண்டில் ஈராக் மீது ஐ. நா. விதித்த தடையின் காரணமாக இந்த விமானங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## ஈராக் ராணுவ நிலை மீது அமெரிக்க விமானம் தாக்கு

வட ஈராக்கில்விமானபறப்பு தடை வலயத்தில் அமைந்திருந்த ஈராக்கிய விமான எதிர்ப்பு நிலை மீது அமெரிக்க யுத்த விமானம் ஒன்று தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் மூன்று ஈராக்கிய படையினர் காயமடைந்தனர்.

இப்பகுதியில் ரோந்தில் ஈடுபட்டிருந்த மூன்று அமெரிக்க விமானங்களில் இரு விமானங்களை ஈராக் தனது ரேடாரில் குறிவைத்ததையடுத்தே தமது போர்விமானம் ஒன்று ஈராக்கிய நிலைமீது ஏவுகணை தாக்குதலை நடத்தியதாக அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## அறிக்கை

(டில்லி)

அயோத்தி பாபர் மசூதி இடிக்கப்பட்டதற்கு மத்திய அரசின் ஆத்திரமூட்டும் செயல்களும் சட்டமுறை தாமதமும்தான் காரணம் என பாரதீய ஜனதா டில்லியில் வெளியிட்ட அயோத்தி குறித்த தனது 175 பக்க விபர அறிக்கையில் குற்றஞ்சாட்டியுள்ளது.

## அமெரிக்கா கவலை

(வாஷிங்டன்)

பாகிஸ்தானில் ஜனநாயக ஆட்சி முறையின் எதிர் காலம் குறித்து அமெரிக்கா பெரும் கவலை தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானில் பிரதமர் நவாப் ஷெரிபின் அரசு கலைக்கப்பட்டமைகுறித்து கருத்து வெளியிட்ட அமெரிக்க வெளியுறவுத் துறைப் பேச்சாளர் ஒருவர் மேலும் கூறுகையில், எல்லாத் தரப்பினரும் சட்டத்திற்கு இணங்க செயற்படுவார்கள் என்றும், நாட்டின் ஜனநாயக முறையை பாதுகாக்கும் வகையில் செயற்படுவார்கள் என்றும் வாஷிங்டன் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும் பாகிஸ்தானில் நிலைமை குறித்து வாஷிங்டன் உன்னிப்பாக கவனித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே வேளை பாகிஸ்தானின் முப்படைகளினதும் உளவு விசாரணைப் பிரிவுத் தலைவர் லெப். ஜெனரல் ஜாவீது நசீர், புலனாய்வு கழகத் தலைவர் பிரிகேடியர் இம்றியாஸ் அலி ஆகியோர் தமது பதவிகளை ராஜினாமாச் செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# பிரதம குரு உட்பட 90 பேர் தற்கொலை

## அமெரிக்காவில் சம்பவம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் இருக்கும் சமய நிலையம்ஒன்றில்தொண்ணூறு பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவர்களில் மதத் தலைவரான டேவிட் கோரசும் ஒருவராவர். அத்துடன் பல பெண்கள் சிறுவர்களும் தற்கொலை செய்துள்ளனர்.

எவ்.பி.ஐ. வட்டாரங்களை மேற்கோள்காட்டி ஏஜென்சிச் செய்திகள்மேலும் கூறுகையில், பெடரல் பொலிசார் கனரக வாகனங்கள் மற்றும் ஆயுதங்கள் சகிதம் இச்சமய நிலையத்தை முற்றுகையிட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. சுமார் 51 நாள் நீடித்த இம்முற்றுகையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் கண்ணீர்ப்புகை போன்றவற்றை பிரயோகித்தபடியும், வளாகத்தை சுற்றியுள்ளமதில்களில் ஓட்டைகளை உருவாக்கிய படியும் உள் நுழைய முயற்சித்த போதுஉள்ளே இருந்தவர்கள் தீ மூட்டித் தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

மதத் தலைவரான டேவிட் கோரேசுக்கு எதிராக ஆயுத துஷ்பிரயோகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு சமஷ்டி நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்தத் தீப் பிழம்புகளுக்கு இடையே சிக்கியிருந்த ஏழு ஆண்களும் ஒரு பெண்ணும் உயிருடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ள தாகவும் பொலிசார் கூறியுள்ளனர்.

சில வாரங்கட்கு முன்னர் கந்தரோடையிலிருந்து தமிழ்ப் பிராமி மட்பாண்டச் சாசனமொன்று மீட்கப்பட்ட அதே மையத்திலேயே இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த எலும்பினாலான கருவி அகழ்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

திரு. கிருஷ்ணராசா மேலும் இந்த வரலாற்று மூலத்தினைப் பற்றித் தகவல் தருகையில்; எலும்பினாலான கத்தி போன்ற இக்கருவியில் வரையப்பட்டுள்ள வடிவமானது தலையில் இரண்டு கொம்புகள், கழுத்தின் கீழ்த்தாடை (சுருக்கங்களுடன்) ஆகியவற்றினையுடைய நீட்டுப்போக்கான எருது ஆக அமையலாம் டல் மண்படையடுக்கொன்றினால் வேறுபடுத்தப்பட்ட மண்படையடுக்கினூடே முழுமையான பெரிய சிப்பிகளும், பளிங்குருத் தன்மை கொண்ட (குவாட்ஸ்) கற்களும் நிறைந்துள்ள மையமொன்றிலிருந்தே இக்கருவி பெற்றுக் கொள்ளப்பட்டது என்றார். இத்தகைய நிலையானது பெருங்கற்காலப் பகுதிக்கு முதல் உள்ள ஒரு காலப் பிரிவுக்குரியதாக இந்த முக்கியத்துவம் வாய்ந்த எலும்புக் கருவியினைக் கொள்வதற்கு எம்மை தூண்டுகின்றது எனவும் சூசகமாக அவர் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் ஆராய்ந்து வருகின்றார்.

## கல்விக்கழக ஆசிரியர்க்கு சேவைக்காலப் பயிற்சி

பண்டத்தரிப்புக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விக்கழக ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சிக் கருத்தரங்கும் செயலமர்வும் நாளை முதல் சனிக்கிழமை வரை மருதனார்மடத்திலுள்ள யூனியன் கல்லூரி மண்டபத்திலும் 23, 24, 25ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியிலும் நடைபெறுமென பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பழை, மல்லாகம், காங்கேசன்துறை, அம்பனை, இளவாலைக் கொத்தணிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் யூனியன் கல்லூரியில் நடைபெறும் கருத்தரங்கிலும் பண்டத்தரிப்பு, வட்டுக்கோட்டை, சுழிபுரம், காரைநகர் கொத்தணிகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நிகழும் கருத்தரங்கிலும் தங்கள் வசதிக்கேற்பப் பங்குகொள்ளலாமென அறிவித்துள்ளார்.

இதேவேளை தென்மராசிட் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விக் கழக ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக் கருத்தரங்கு இம்மாதம் 23-ந்திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை யா/சாவகச்சேரி மகளிர் மகாவித்தியாலத்தில் இடம்பெறும் என தென்மராட்சி கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தெரிவித்துள்ளார். அத்துடன் கருத்தரங்கு முடிவில் ஒருவருடமாக சேவையாற்றியமைக்காக ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (86)

## திருட்டுகள் அதிகரிப்பு

கடந்த ஒரு வார காலத்தில் பருத்தித்துறையில் நான்கு கடைகள் திருடர்களின் கைவரிசைகளுக்கு இலக்காகின.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது:- புதுவருடத்தின் பின்னர் சுபமுகூர்த்தம் பார்த்து கடைகளை திறப்பதற்கு உரிமையாளர்கள் காத்திருந்தனர். இவ்வேளை, திருடர் கோஷ்டி கடைகளின் கூரைகளைப் பிரித்து உட்புகுந்து பெறுமதிமிக்க பொருள்களை களவாடிச்சென்றுள்ளது.

பருத்தித்துறை பிரதான வீதியில் உள்ள ஸ்ரீ முருகன் மருந்துக் கடையில் ரூபா850/- பணமும், பெறுமதிமிக்க மருந்து வகைகளும், பருத்தித்துறை மருதடியிலுள்ள ரதிஸ்ரோர்ஸ் பலசரக்கு மாளிகையில் சிகரெட்வகைகள், ஒரு தொகைப்பணம், கடையில் வெளிச்சத்திற்கு பாவிக்கப் படும் பெற்றோல் மாக்ஸ் ஒன்றும் பருத்தித்துறை சிவன் கோவில் வீதியில் அருகருகே உள்ள ஸ்ரீ கந்த விலாஸ் சாப்பாட்டுக்கடையிலிருந்து சில்வர் பாத்திரங்கள், பால்மா வகைகளும் அருகிலுள்ள எரிபொருள் விற்பனை நிலையத்திலிருந்துசுமார்25ஆயிரம்ரூபா பெறுமதியான எரிபொருள்களும், மோட்டார் சையிக்கிள் திருத்தம் செய்வதற்கு உதவும் சாவிகளும் களவாடப்பட்டுள்ளன.

இதுபற்றிகடைஉரிமையாளர்கள் நால்வரும் பருத்தித்துறை காவல் பணிமனையில் புகாரிட்டுள்ளனர்.

## புராணிகர்கள் கௌரவிப்பு

சாவகச்சேரி-மீசாலை அருள்மிகு பன்றிக்கேணி கந்தசுவாமி கோவிலில் கந்தபுராண கலாசார விழாவும் புராணிகர்கள் கௌரவிப்பும் எதிர் வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்குநடைபெறவுள்ளது.

ஈழநாதம்

# அ.தி.மு.கவை பிளவு படுத்த பழைய உத்தியே போதும்

## வாழப்பாடி தெரிவிப்பு

(சென்னை)

''காங்கிரசை உடைக்க அ. தி. மு. க. முயற்சி செய்கிறது. ஆனால் அ. தி. மு. கவை உடைக்க பழைய உத்திகளே போதும்'' என்று தமிழக காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கூறியுள்ளார்.

சென்னையில் நிருபர்களிடம் பேசிய வாழப்பாடி இது பற்றி மேலும் கூறியதாவது:

கூட்டணி முறிந்தது என்று அ. தி. மு. க. அறிவித்துவிட்டது. சுப்பிரமணியம் சுவாமியின் புகார் மனுவை தேர்தல் கமிஷனுக்கு கவர்னர் அனுப்பி விட்டார். இதன் பிறகும் காங்கிரஸ் எம். எல். ஏக்களிடம் பிளவை ஏற்படுத்தி கட்சியை உடைக்க முயற்சி நடக்கிறது.

அ தி. மு. கவின் தவறான போக்கு அந்த கட்சிக்கே மிகவும் ஆபத்தானது. காங்கிரசை உடைக்க யார் யார் முயற்சி செய்கிறார்கள் என்பது பற்றிய விபரங்களை நான் தகுந்த நேரத்தில் வெளியிடுவேன். இது குறித்து எங்கள் தலைவர் நரசிம்மராவுக்கும் அறிக்கை அனுப்பியுள்ளோம்.

அ தி. மு கவை உடைக்க எமக்கு புதிய உத்திகள் தேவையில்லை. பழைய உத்தியே போதும். கூட்டணி வேண்டும் என்று சொல்ல யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் கூட்டணி இல்லை என்று தமிழக காங்கிரஸ் தீர்மானம் நிறைவேற்றிய பிறகு அப்படி பேசுவது தவறு இவ்வாறு பேசுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## அமெரிக்க மாணவருக்கு பொது அறிவு குறைவு

[பிலடெல்பியா]

மிகவும் தரம் வாய்ந்த அமெரிக்க பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களில் ஒரு தொகையானோருக்கு தற்போதைய உலக நடப்பு விவகாரங்களில் அறிவு குறைவாகவே இருப்பதாக ஓர் ஆய்வு கூறுகின்றது.

கிழக்கு அமெரிக்காவில் 8 பல்கலைக் கழகங்களில் 3119 மாணவர்களிடையே நடத்தப்பட்ட ஆய்வில் பலர் தற்போதைய விவகாரங்கள் பற்றிய எளிதான வினாக்களுக்கே விடையளிக்க தவறினர். 35 சத வீதமானவர்களுக்கு பிரிட்டிஷ் பிரதமர் யார் என்று தெரியவில்லை. அமெரிக்க சபாநாயகரின் பெயரை 44 சத விகிதத்தினரால் வெளியிட முடியவில்லை. 30 சத வீதமானவர்களுக்கு நெல்சன் மண்டேலாவை தலைவராகக் கொண்ட கட்சி ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் என்பது தெரியவில்லை.

## மயக்கமருந்து கொடுத்து பொருள்கள் அபகரிப்பு

(வவுனியா)

கொழும்பிலிருந்து வவுனியா வந்த இரு யாழ். இளைஞர்கள் ரயிலில் வைத்து ஏமாற்றுப் பேர்வழிகளிடம் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்தனர். புத்தாண்டு தினத்தன்று இச் சம்பவம் இடம் பெற்றது.

மானிப்பாய், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரும் ரயிலில் வவுனியா வந்த போது இரு சிங்கள இளைஞர்கள் அவ்விருவருடனும் தாமாகவே அறிமுகமாகி பழகினர். பின்னர் குளிர்பானம் வாங்கி அருந்தக் கொடுத்தனர்.

இதன்பின் இந்த இரு யாழ். இளைஞர்களுக்கும் நடந்தது தெரியவில்லை. காலையில் வவுனியாவை நெருங்கிய போதே இவர்கள் மயக்கம் தெளிந்து எழுந்தனர். இருவரினது தங்கமோதிரம், மணிக்கூடு. பணம் யாவும் அபகரிக்கப்பட்டிருந்தன.


# வெளிவந்துவிட்டது!

'விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள்'

(ஆங்கில நூல்)

WOMEN FIGHTERS OF



புதிவு செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா உணவகம்

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

[சி-6438]


## சைவசித்தாந்த கருத்தரங்கு

(குருநகர்)

யாழ். திருமறைக் கலாமன்ற சைவ சித்தாந்த ஆய்வு வட்டக் கருத்தரங்கு நாளை மாலை 4.30 மணிக்கு கலாமன்றக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

''ஈழத்தில் சைவ சித்தாந்தம்'' என்னும் பொருளில் நான்காம் தொடருரையை பேராசிரியர் வண. நீ மரிய சேவியர் அடிகள் நிகழ்த்துவார். (21)

## பிரசாரம் ஆரம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி தலைமையிலான மக்கள் முன்னணியின் மாகாணசபை தேர்தல் பிரசாரங்கள் நாளை வியாழக்கிழமை அநுராதபுரத்தில் ஆரம்பிக்கின்றன.

### நூல் வெளியீடு

(நெல்லியடி)

கரணவாய் கிழக்கு ஜனசக்தி சனசமூக நிலைய ஆதரவில் கதிர் ஒளி கையெழுத்துப் பிரதி நூல் வெளியீடு விழா கடந்த 14 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு நடைபெற்றது.

வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பைந்தமிழன் நூலை வெளியிட்டு வைத்தார். [30]

### கலந்துரையாடல்

''கராத்தே கண்காட்சி, போட்டிகள் நடாத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினர் நாளை காலை 9.30 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலகத்தில் நடாத்த உள்ளனர். யாழ். மாவட்டத்திலுள்ள சகல கராத்தே வகுப்பு நடாத்தும் ஆசிரியர்களையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

### ''வாதுவ'' கப்பல் பொருள்களை இறக்கும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் புறப்பட்டு வந்து காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்ற ''வாதுவ'' என்கின்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து பொருள்களை இறக்கும் என தெரிவிக்கப்பட்டது.

[நி], [பா]

## வீட்டிலிருந்த பெண்ணிடம் ஏமாற்றிப் பணம் பறிப்பு

(தென்மராட்சி)

வீட்டிலிருந்த பெண்மணி [illegible] பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதா[illegible]

## விரைவில் அறிவிப்பர்

[கொழும்பு]

தென்னிலங்கைப் பகுதிகளில் நடைபெறும் மாகாண சபைத் தேர்தல்களின் போது எவ்வாறு நடந்து கொள்வது? எந்தக் கட்சியினரை ஆதரிப்பது என்பது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. ஆர். எல். எவ்பினரும் தமது முடிவுகளை விரைவில் அறிவிக்க இருக்கிறார்கள் என்று தெரியவந்துள்ளது.

### மேதின ஏற்பாட்டு கலந்துரையாடல்

1993ஆம் ஆண்டு மேதின ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை காலை 9-30 மணிக்கு யாழ். மா. கூ. சபைத்தலைவர் திரு. வை. செந்திநாதன் அவர்கள் தலைமையில் யா. மா. கூ. சபை மண்டபத்தில் நடைபெறும்.

அக் கலந்துரையாடலுக்கு ப. நோ. கூ. சங்க, தெ. ப. பொ. கூ. சங்க, இரண்டாம் படி கூட்டுறவுச்சங்க, ஏனைய கூட்டுறவுச் சங்க தலைவர்கள் பொது முகாமையாளர்களும், ஐக்கிய நாணய சங்கங்களின் தலைவர்கள், செயலாளர்களும், ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களிலும் உள்ள தொழிற் சங்க தலைவர்களும், செயலாளர்களும் குறித்த நேரத்தில் கலந்துரையாடல் ஆரம்பிக்கக்கூடியவாறு வருகை தந்து பங்குபற்றி மேதின ஏற்பாடு சிறப்புற அமைய பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும் மேதினம் தொடர்பான பதாகைகளை தங்கள் சங்க முன்றலில் தொங்கவிட உடனடி நடவடிக்கை எடுத்து உதவுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

### வருடாந்த அமர்வு

யாழ்ப்பாண விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் தனது வருடாந்த அமர்வினை இன்றும், நாளையும், நாளைய மறுதினமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பெளதிகவியல் விரிவுரை மண்டபத்தில் முற்பகல் 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை நடாத்தவுள்ளது. விஞ்ஞான விடயங்கள். ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. உறுப்பினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருகை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 2-ம் லெப். வீரையனுக்கு இன்று இறுதி அஞ்சலி

கடந்த திங்களன்று இயக்கச்சிப்பகுதியில் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக்கொண்ட 2-ம் லெப்டினன்ட் வீரையன் (கந்தசாமி விஜயதாஸ் வத்தராயன் வடக்கு தாளையடி) எனும் போராளியின் வித்துடல் இன்று முற்பகல் 10.00 மணியளவில் தாளையடி மேஜர் அரி நினைவுருவப் படத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டு அணிவகுப்பு மரியாதையுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

## கம்பர்மலை இளைஞர் கொழும்பில் கைது

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் வைத்து வல்வெட்டித்துறை கம்பர்மலைப் பகுதி வாசியான இரட்ணம் இரட்ணராஜா என்னும் இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டவர் என்றும் தலைவர் பிரபாகரனுடன் தொடர்பு கொண்டிருந்தவர் என்றும் பொலிஸார் மேலும் கூறியுள்ளனர்.

## தமது யோசனையை ஆதரிக்குமாறு இந்தியாவிற்கு சிறினிவாசன் கடிதமூலம் கோரிக்கை

இலங்கை இனப்பிரச்சினைத் தீர்விற்காக அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு தான் முன்வைத்த தீர்வுயோசனைகளை இந்தியா ஆதரிக்க வேண்டும என வேண்டுகோள் விடுத்து இந்தியப் பிரதமர் நரசிம்மராவுக்கு கே. சிறினிவாசன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இனப்பிரச்சினையானது அடிப்படையில் இலங்கையின் பிரச்சினையே என்றபோதிலும் இரத்தத்தையும் உயிர்களையும் விலையாகக் கொடுத்த ஒரு பிரச்சினையில் இந்தியா அக்கறையில்லாமல் இருக்க முடியாது என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

### கரபந்தாட்டம்

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் மாவட்ட நிலை கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை 3 30 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் 17 வயதுக்குட்பட்டோருக்கான 'பி' பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயத்தை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும், மாலை 4-15 மணிக்கு 19 வயதுக்குட்பட்டோருக்கான ''ஏ'' பிரிவில் உரும்பராய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும் மோதுகின்றன,

இதே வேளை அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-30 இற்கு 17 வயதுக்குட்பட்டோர் ''சி'' பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து வேலாயுதம் மகாவித்தியாலயமும், 4-15 மணிக்கு 19 வயதுக்குட்பட்டோருக்கான ''சி'' பிரிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து வசாவிளான் [illegible]

### சமுகம் தரவும்

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்த விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான கூட்டம் இன்று மாலை 4.30 மணிக்கு இராமநாதன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இக்கூட்டத்தில் போட்டிகள் நிரல்படுத்தப்படவுள்ளதால், போட்டிகளில் பங்குபற்றவுள்ள கழக பிரதிநிதிகள் தவறாது சமுகம் தருமாறு பிரிவின் விளையாட்டலுவலர் கேட்டுக்கொள்கிறார்.

### தமிழ்நாடு

டன.

நேற்று சட்டப் பேரவையில் எம். ஜி ஆர். அ தி. மு க. உறுப்பினர் திருநாவுக்கரசு காவல் துறையின் மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் பெரும் பகுதியை தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எடுத்துக்கொண்டு விட்டதாகக்கூறி கூடுதலான நேரம் வாய்ப்புத்தர வேண்டும் என வேண்டுகோள்விடுத்தார். இக்கோரிக்கை சட்டசபை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொள்ளாத திருநாவுக்கரசு தொடர்ந்து பேச முற்பட்ட போது அவரை வெளியேற்றுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்

கள் ரயிலில் வைத்து ஏமாற்றுப் பேர்வழிகளிடம் தமது உடைமைகள் அனைத்தையும் இழந்தனர். புத்தாண்டு தினத்தன்று இச்சம்பவம் இடம்பெற்றது.

மானிப்பாய், வேலணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இருவரும் ரயிலில் வவுனியா வந்த போது இரு சிங்கள இளைஞர்கள் அவ்விருவருட

னர்.

இதன்பின் இந்த இரு யாழ். இளைஞர்களுக்கும் நடந்தது தெரியவில்லை. காலையில் வவுனியாவை நெருங்கிய போதே இவர்கள் மயக்கம் தெளிந்து எழுந்தனர். இருவரினது தங்கமோதிரம், மணிக்கூடு, பணம் யாவும் அபகரிக்கப்பட்டிருந்தன.

தேசிய காங்கிரஸ் என்பது தெரியவில்லை.

யாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுக்கொள்கின்றது.

யாழ்ப்பாண விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் தனது வருடாந்த அமர்வினை இன்றும், நாளையும், நாளைய மறுதினமும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பௌதிகவியல் விரிவுரை மண்டபத்தில் முற்பகல் 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 5.00 மணி வரை நடாத்தவுள்ளது. விஞ்ஞான விடயங்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. உறுப்பினர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் வருகை தரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானத்தில் 17 வயதுக்குட்பட்டோருக்கான 'பி'' பிரிவில் மட்டுவில் மகாவித்தியாலயத்தை எதிர்த்து கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயமும், மாலை 4-15 மணிக்கு 19 வயதுக்குட்பட்டோருக்கான ''ஏ'' பிரிவில் உரும்பராய் இந்துக் கல்லூரியை எதிர்த்து யூனியன் கல்லூரியும் மோதுகின்றன,

இதே வேளை அத்தியார் இந்துக் கல்லூரி மைதானத்தில் மாலை 3-30 இற்கு 17 வயதுக்குட்பட்டோர் ''சி'' பிரிவில் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியை எதிர்த்து வேலாயுதம் மகாவித்தியாலயமும், 4-15 மணிக்கு 19 வயதுக்குட்பட்டோருக்கான ''சி'' பிரிவில் சென்பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து வசாவிளான் மத்திய மகாவித்தியால்யமும் மோதுகின்றன.

## தமிழ்நாடு

டன.

நேற்று சட்டப் பேரவையில் எம். ஜி ஆர். அ தி. மு க. உறுப்பினர் திருநாவுக்கரசு காவல் துறையின் மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு தனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்தின் பெரும் பகுதியை தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா எடுத்துக்கொண்டு விட்டதாகக்கூறி கூடுதலான நேரம் வாய்ப்புத்தர வேண்டும் என வேண்டுகோள்விடுத்தார். இக்கோரிக்கை சட்டசபை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது. அதனை ஏற்றுக் கொள்ளாத திருநாவுக்கரசு தொடர்ந்து பேச முற்பட்ட போது அவரை வெளியேற்றுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார்

திருநாவுக்கரசு சட்டசபையிலிருந்து வெளியேறிக்கொண்டிருக்கும்போது அ. தி. மு. க. உறுப்பினர் ஒருவர் தகாத வார்த்தைகளால் அவரை ஏசினார். அதற்குக் காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்ஸிஸ்ட்கம்யூனிஸ்ட் உறுப்பினர்கள் ஆட்சேபம் தெரிவித்துக் குறிப்பிட்ட அ தி மு. க. உறுப்பினர் மன்னிப்புக் கேட்க வேண்டும் என வற்புறுத்தினர்.

அவரைக் கண்டிப்பதாக சட்டசபை சபாநாயகர் தெரிவித்தார். ஆளும் கட்சி உறுப்பினரே அநாகரிகமாக பேசுவது எப்படி நியாயம்? என்று எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் வினவினார். தொடர்ந்து சபையில் கூச்சலும் குழப்பமும் நிகழ்ந்ததைத் தொடர்ந்து சபை நடவடிக்கைகள் ஒத்திவைக்கப்பட்டன.


இதனையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். இவ் உண்ணாவிரதம் இரவும் தொடர்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


# வெளிவந்துவிட்டது!

## 'விருதலைப் புலிகளின் பெண் போராளிகள்'

(ஆங்கில நூல்)

WOMEN FIGHTERS OF LIBERATION TIGERS




திருமதி அடேல் ஆன் அவர்களால் எழுதப்பட்ட இந்நூல், புலிகள் இயக்கத்தின் மகளிர் படையணியினது வரலாற்றுப் பிறப்பையும், அதன் படிநிலை வளர்ச்சியையும், அது கொண்டிருக்கும் ஒப்புவமையற்ற - தனித்துவமான போர் வரலாற்றையும் சிறப்பாகச் சித்திரித்துக் காட்டுகின்றது.

பெண் புலிகளின் போர் வரலாற்றை வெளிப்படுத்தும் 28 நிழற்படங்கள் கொண்ட இந்நூலின் பிரதி ஒன்றின் விலை ரூபா **100/-** ஆகும்.

இந்நூலினை அனைத்துப் புத்தகசாலையிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(சி-6472)



## பதிவு செய்து கொள்ளுங்கள்

ஏகோபித்த வாடிக்கையாளர்கள் வருகையால் உங்கள் உணவுப் பார்சலுக்கு முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுங்கள்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா உணவகம்**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை சுண்டுக்குளி.

[சி-6438]



## கிளை ஆரம்பம்

எமது அன்பு நிறைந்த வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க எமது சேவையை எம்மக்களுக்கு விரிவுபடுத்தும் நோக்குடனும் அதன் முதற் கட்டமாக

ஜோ. எகட்டனின்

ஜெசித்தாரா

தனது சேவையை கந்தர்மடம், அரசடிவீதி அங்கர் பார்மஸியில் விற்பனைப் பிரிவை

18-4-1993

பகல் 12-00 மணிக்கு ஆரம்பித்துள்ளது.

எமது சுவைமிகு தரமான உணவுப் பார்சல்களை பகல் 11-30 மணிமுதல் வழங்குகின்றது.

பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும்கந்தர்மடம், திருநெல்வேலி. இந்துக் கல்லூரி மற்றும் அதைச் சார்ந்துள்ள பிரதேச மக்களுக்கு ஓர் வரப்பிரசாதம்.

| | | |
|---|---|---|
| மீன் | - | 29-50 |
| இறைச்சி | - | 29-50 |
| மரக்கறி | - | 24-50 |

அத்துடன் எவ்வகையான ஓடர்களையும் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

ஜோ. எகட்டனின்

**ஜெசித்தாரா**

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை. சுண்டுக்குளி.

(சி-6446)


## ''வாதுவ'' கப்பல் பொருள்களை இறக்கும்

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் இருந்து யாழ். குடாநாட்டிற்கான ஒரு தொகுதி உணவு மற்றும் பொருள்களுடன் புறப்பட்டு வந்து காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்ற ''வாதுவ'' என்கின்ற கப்பல் இன்று பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்து பொருள்களை இறக்கும் என தெரிவிக்கப்பட்டது.

[நி], [பா]

## வீட்டிலிருந்த பெண்ணிடம் ஏமாற்றிப் பணம் பறிப்பு

(தென்மராட்சி)

வீட்டிலிருந்த பெண்மணியிடம் பொய்கூறி ஏமாற்றி இனந்தெரியாத நபர் ஒருவர் பணம் பறித்துச் சென்ற சம்பவமொன்று கொடிகாமத்தில் இடம்பெற்றுள்ளது.

சென்ற வெள்ளிக்கிழமையன்று கொடிகாமம் பருத்தித்துறை வீதியிலிருக்கும் மகேந்திரன் என்பவரது வீட்டில் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

வீட்டிற்கு சென்ற நபர் ஒருவர் அங்கிருந்த பெண்ணிடம் அவரது கணவரை வழியில் கண்டதாகவும், வியாபாரத்திற்காக கொண்டு வந்த மரப்பலகைகளை விலைக்கு தரும்படி அவர் கேட்டு வாங்கியதாகவும் கூறியதுடன் அதற்கான பெறுமதியாக ரூபா 1500/- தரும்படி வாங்கச் சொன்னதாகவும் தெரிவித்தார். அதனை நம்பிய அப் பெண்ணும் பணத்தைக் கொடுத்து விட்டார். ஆனால் கணவர் திரும்பி வந்த பின்னர் அப்படி தான்பலகை எதையும் வாங்கவில்லை என்பதைக் கூறியபோது பெண்மணி தான் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்து கொண்டார்.

## 55 ஆயிரம்

ஆங்கில மொழியில் 4 பேரும் தகுதிபெற்றுள்ளனர்.

கலைப்பிரிவில்சிங்களமொழியில் 21375 பேரும், தமிழ் மொழியில் 4077 பேரும், ஆங்கில மொழியில் 6 பேரும் தேறியுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் சிங்கள மொழியில் 13439 பேரும், தமிழ்மொழியில் 3562 பேரும் ஆங்கில மொழியில் 9 பேரும் தகுதிபெற்றுள்ளனர்.

புள்ளிவிபரங்களின்படி இம்முறை மேற்படி பரீட்சையில் 34 வீதமானோர் பல்கலைக் கழகப் பிரவேசத்துக்கு அடிப்படைத் தகுதிகளைப்பெற்றுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## பயிலுநர்

பெறும் சாதாரண பயிலுநர் ஆசிரியர் 01-01-93 இல் ரூபா 1800 உம், 01-07-93 இல் ரூபா 2000 பெறுவர்.

01-01-93 இற்கு முன்னர் 2050 பெறும் பட்டதாரிபயிலுநர் ஆசிரியர் 01-01-93 இல் 2350 உம் 01-07-93 இல் இருந்து ரூபா 2550 உம் பெறுவர். [17]

## தமிழகக்

கடற்படையினரும் கரையோரக் காவற்படையினரும் எச்சரிக்கையடைந்ததையடுத்து அப்படகு ஆழ்கடலுக்குத்திரும்பிச் சென்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## பெண்கள்

இருந்து இவை மூன்று இளம் பெண்களினுடையவை எனவும், ஒன்று சுமார் ஆறு வயது மதிக்கத்தக்க சிறுமியினுடையதென்றும், இரண்டு 8-10 வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலைச் சிறுவர்களுடையது எனவும் தெரியவருகின்றது.

இதேவேளை, இச்சடலங்கள் 87, 88 ஆம் ஆண்டுகளில் புதைக்கப்பட்டிருக்கலாம் எனவும் ஊகிக்கப்படுகின்றது. இக்காலப் பகுதியில் இந்திய இராணுவம் இப்பகுதிகளில் நிலைகொண்டிருந்தமையால் இக்கொலைகள் அவர்களின் கைவரிசையாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## பெற்றுக்கொள்ளவும்

துரைசிங்கம் தர்மகுலசிங்கம் அம்பலவாணர் வீதி, உடுவில், சுன்னாகம் என்பவருடைய முக்கிய ஆவணங்கள் யாழ். வைத்தியசாலை நோயாளர் நலன்புரிச் சங்கத்தில் நலன் விரும்பி ஒருவர் கண்டெடுத்து ஒப்படைத்துள்ளார். உரியவர் நேரடியாக வந்து பெற்றுக் கொள்ளலாம்.

## மீனவரின்

சமயம் மீனவர்கள் பல தொழில் உபகரணங்களை கடலில் கைவிட்டுவிட்டதாகவும், படகுகளை உடைக்கும் சத்தம் கேட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (17)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 20-04-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9080

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்

26-4443, 40-2249, 26-4429, 27-2004, 42-0728, 27-6769, 42-0266, 26-0382, 28-940, 27-2056, 28-0912, 24-6293, 28-8229, 27-2020, 41-1996, 41-6686, 40-1516, 41-8445, 40-7704.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-9625, 41-8292, 27-4628, 27-9764, 24-5041, 26-0535, 24-9645, 42-9326, 26-6361, 24-4292, 42-1046.


இ
ன்
றி

## ''ராகமாலிகா''வின் இன்னிசை மழை

இடம்: சென்பற்றிக்ஸ் கல்லூரி மண்டபம்

நேரம்: மு. ப. 9. 30, பி. ப. 2, 30

நுழைவுச்சீட்டுகள் மண்டபவாயிலில் பெற்றுக்கொள்ளலாம்.

(4732)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1993 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.